[2010 ஏப்ரல் 26

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில், மணக்குடி ஊராட்சியிலே ஒரு ஆதி திராவிடர் பள்ளி அமைந்திருக்கிறது. இது ஆரம்பப் பள்ளியாக இருக்கிறது. இது நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றோம். குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் இயக்கப்படுகின்ற பல பள்ளிகள் தரம் உயர்த்தப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஆதி திராவிட மாணவச் செல்வங்கள் அதிகமாகப் படிக்கக்கூடிய பள்ளியாக இது உள்ளது. இந்த ஆண்டு, இந்தப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பினமாகக் கருதி, தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

100—

தொழிற்பேட்டை

***71430—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

முற்பகல் 10-15

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் அதுபோன்ற கதர்த் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழகத்திலே கதர்த் தொழிலில் முதன்மையான இடத்தில் செயல்பட்டு வந்த திருப்பூரில் ஒரு சிறந்த தொழிற்பேட்டை செயல்பட்டு வந்தது. ஆகவே, அங்கு கதர் உற்பத்தி, இராட்டை நூற்பது, தச்சு வேலைகள், காலணிகள் போன்ற பல்வேறு பணிகளில் சில ஆயிரக்கணக்கான பேர் வேலை செய்து வந்த அந்தக் கதர் வாரியத் தொழில் மையம் இப்போது செயலிழந்து அந்த இடம் கொஞ்சம் கொஞ்சமாக வாடகைக்கு விடக்கூடிய நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. பழைய நிலையில், திருப்பூர் கதர்த் துறையிலே தலைநிமிர்ந்து நிற்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறை கடந்த பல ஆண்டுகளாக நலிவுற்ற நிலையிலிருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பின்பு, அதற்கென்று ஒரு தனிக் கவனத்தைச் செலுத்தி, இப்போதுதான் முதன்முறையாக மூன்று கோடி ரூபாய் இலாபம் என்ற அளவிற்கு இந்த வருடம் அந்தத் துறை இலாபத்தை எட்டியுள்ளது. பல வருடங்களுக்குப்பின்,

20 ஆண்டுக் காலத்திற்குப்பின்தான் அந்த இலாபம் என்ற நோக்கே வந்திருக்கிறது. எதிர்காலத்தில் தொடர்ந்து இந்த இலாபம் அதிகரிக்கவும் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். திருப்பூரில் உள்ள நெசவுத் தொழில், அதாவது தறிகளும், நூற்பு நிலையங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா-விடை நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள்தான் கையை உயர்த்திக் காட்டினீர்கள் (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: Mike கொடுங்கள் Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் முதலமைச்சர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்து எடுக்கப் போகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு தலைசிறந்த வார இதழாக இருக்கிற "குமுதம்" இதழ் குறித்து இப்போது மத்தியப் புலனாய்வுத் துறை நம்முடைய சென்னைக் கமிஷனர் ஆபிசில் வழக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்தும் எடுக்கப் போகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான், உட்காருங்கள், முடிந்தது.